# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

O.S. No.66 of 2021

Deposition of PW.1

Name of the Witness: திரு.மாது

Date : 06.03.2026

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)**

பி.சா.ஆ.1 ல் 28.11.2020ம் தேதியில் 1,2 லக்கமிட்ட தனபால் மனைவி வைரம் ஆகியோரின் 3 லக்கமிட்ட மாது என்பவரிடமிருந்து ரூபாய் 10,00,000/- ம் பெற்று கொண்டு மேற்படி சொத்தின் சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி அதை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார், பின்னர் அந்த ஆவணம் தவறானது என்று சொல்கிறார். பி.சா.ஆ.1 ரூ.10,00,000/- என்று எண்ணால் மட்டும்தான் எழுதப்பட்டுள்ளது, வார்த்தைகளால் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் ரூபாய் என்று குறிப்பிட்டு இடைவெளி விட்டு .10,00,000/- என்று எண்ணால் எழுதப்பட்டுள்ளது என்றால் பி.சா.ஆ.1 பொய்யானது, அதனால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா .ஆ.2ல் இடைசொருகலால் குறிப்பிட்டுள்ள வாக்கியங்கள் பி.சா.ஆ.1ல்

இல்லை என்றால் பி.சா.ஆ.2 தவறானது. பி.சா.ஆ.1ல் நோட்டரி கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் ராஜ் 3ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலமாகத்தான் முதல் முதலில் சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 04.11.2020ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு என்றால் சரிதான். இந்த அறிவிப்பு கொடுத்த பிறகு எனக்கும் 3ம் பிரதிவாதிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு நான் வேறு வழக்கறிஞர் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்தை அவர் வாங்கிவிட்டதால் நான் வேறு வழக்கறிஞர் வைத்து தாக்கல் செய்தேன். நான் வேறு ஒரு வழக்கறிஞர் வைத்து சட்ட அறிவிப்பு அனுப்பி பிறகு 1 மாதம் கழித்து பிறகு வழக்கு தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பிரபு என்ற வழக்கறிஞர் மூலமாக 1,2 பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது.

எனக்கு யார் மூலமாக அறிவிப்பு கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் பிரபு என்ற வழக்கறிஞர் மூலமாக 18.03.2021ம் தேதியில் அறிவிப்பு கொடுத்துவிட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் நடுவில் ரூ.15,00,000/- அட்வான்ஸ் கொடுத்ததாகவும் அதை திருப்பி கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் வழக்கு போடுவதற்கு

முன்பாக அனுப்பிய சட்ட அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பை தாக்கல் செய்தால் எனக்கு எதிராக போய்விடும் என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.